**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.19/2015</u>**

<u>முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மைக்கேல் தாஸ் | தந்தை பெயர் | : அடைக்கலம் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 04.02.2025

**P.W. : 1**

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வாசாஆ,17 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் விண்ணப்பத்தின் அலுவலக நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் ஒரு மனு எழுதிக் கொடுத்தேன், அது என்ன மனு என்று தெரியாது. வாசாஆ.17 ல் 05.11.1989 அன்று தயாரித்தாகவும், 11.01.1990 அதை சரிபார்த்ததாகவும் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 1990 ஆம் ஆண்டிற்கு பிறகு இந்த வரைபடத்தில் கண்ட பகுதி முழுவதும்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. வாசாஆ.17 வரைபடத்தில் உள்ள விபரங்களுக்கும் தற்போது பூஸ்துதியில் உள்ள அமைப்பிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் ஆமாம். அப்போது பொட்டல் காடாக இருந்தது, தற்போது வீடுகள், ரோடு ஆகியவை உள்ளது. பொதுவாக ரோடுகள் அமைத்து அதில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தால் அது பஞ்சாயத்திற்கோ அல்லது மாநகராட்சிக்கோ சொந்தமான ரோடுகள் என்றால், அதுபற்றி தெரியாது. நான் எழுதிக் கொடுக்கவில்லை. எனது தங்கை அன்புமேரி இறந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகிறது. நான் 6 ஆம் பிரதிவாதியான என் தங்கை இறந்தபிறகு அவரது வாரிசுகளுக்கு எதிராகவோ, ஆதரவாகவோ பரிகாரம் கேட்கவில்லை என்றால் தெரியாது. வாசாஆ.17 வரைபடத்தில் உள்ள விபரங்கள் தொடர்பாகவும், தற்போது அந்த பகுதியில் உள்ள அமைப்புகள் தொடர்பாகவும் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால் கூறுவார் என்றால் சரிதான். வாசாஆ.17 வரைபடத்தில் கண்ட விபரங்களுக்கும் தற்போது அந்த பகுதியில் கண்ட அமைப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ.17 வரைபடத்திற்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ.6 லோக்அதாலத் அவார்டில் நான், அன்புமேரி, ஜான் ஜோஸப் கையெழுத்திட்டுள்ளார். ஜான் ஜோஸப் இந்த வழக்கில் தரப்பினர் ஆவார். வாசாஆ.6 தரப்பினர்களின் புகைப்படங்கள் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். அவர்கள் அப்போது புகைப்படம் ஒட்ட சொல்லவில்லை. அந்த

ஆவணத்தில் எங்களது முகவரியை காட்டும் ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. வாசாஆ.6 அவார்டு எவ்வாறு பிறப்பிக்கப்பட்டது என்பதை அதில் உள்ள தரப்பினர்களை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரியல்ல. வாசாஆ.6 ல் கண்ட கணேசன் மற்றும் சந்தானமேரிக்கு கிரைய பத்திரம் எதுவும் நான் எழுதித்தரவில்லை, அவர்கள் கேட்கவில்லை, அதனால் எழுதித்தரவில்லை. 2 ஆம் பிரதிவாதி நாராயணசாமி பெயரில் கிரைய பத்திரம் ஏற்பட்டு அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சமரசமேரி என்பவர் எனது தங்கை. அவர் உயிருடன்தான் உள்ளார். அவருக்கு சாதகமாக பரிகாரம் கேட்கவில்லை, வழக்கில் ஜெயித்தால் அவர்களுக்கும் கொடுப்பேன். அந்த விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1986 ல் மார்டின் அல்போன்ஸா, சார்லஸ் சந்தியாகு ஆகியோர் போலியாக வருவாய் துறையில் பட்டா பெற்றதாக கூறும் நிலையில் அதை ரத்து செய்ய நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதற்குதான் இந்த வழக்கு போட்டுள்ளேன். உண்மையில் அவர்கள் போலியாக பட்டா வாங்கியிருந்தால் வருவாய் துறையிலேயே உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், அது உண்மையான பட்டா என்பதால் தான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.1245/1987 வழக்கிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதியை தரப்பினராக நான் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த மேல்முறையீடு நான் போடவில்லை. அந்த மேல்முறையீடு நான் மற்றும் மார்டின் அல்போன்சா,

சார்லஸ் சந்தியாகு ஆகியோர் வஞ்ச கூட்டாக சேர்ந்து தாக்கல் செய்தது என்றும், அதனால் அதை தவறுகைக்காக தள்ளுபடிக்கு விட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா 1, 2 இன சொத்துக்களுக்கு நான்கெல்லை எதன் அடிப்படையில் போட்டுள்ளேன் என்றால், நான் வாங்கிய 18 செண்ட் பத்திரத்தில் கண்ட விபரங்களின்படி போட்டுள்ளேன். சர்வே எண்.288/12 ல் யார் யார் பெயருக்கு பட்டா உள்ளது என்றால் எங்களுடையது மட்டும்தான் தெரியும், மற்றவர்களுடையது தெரியாது. எங்கள் இடம் சர்வே எண்.288/12A2 ஆகும். இந்த வழக்கில் நான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.288/12A2 என்ற இடத்தைப் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அதற்காக தான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இபி.எண்.384/2006 ல் 2 ஆம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த மனுவில் நீதிமன்றத்தின்மூலம் உண்மையான சுவாதீனம் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றும், பெயரளவில் மட்டுமே சுவாதீனம் வழங்கப்பட்டதாக கூறினால் அது சரியல்ல. வாசாஆ.16 சுவாதீன அத்தாட்சியில் பேரளவில்தான் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து உண்மையான சுவாதீனம் எடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2 ஆம் பிரதிவாதி நல்லெண்ண கிரையதாரர் என்ற அடிப்படையில் தாவா 2 இன சொத்தை வாங்கி அதன் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருக்கிறார் என்றால்சரியல்ல. 2 ஆம் பிரதிவாதியை ஆக்கிரமிப்பாளர் என்று பொய்யாக கூறி அவரது உரிமையையும்,

**அனுபவத்தையும் பறிக்கும் வகையில் பொய்யான விபரங்களைக்கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், வழக்கு சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.